


ST. ANNE'S GENERALATE
Madavaram | Chennai - 600 060
Tamilnadu | India

SEPTEMBER 2023

# AGNL

Volume : 03 Issue : 07

## Monthly Recollection - September 2023

**(Bearers of Christ - Givers of life through)**

**I am His beloved daughter, and in me, He is well pleased (Mark 1:10-11)**

### What does it mean that Jesus is the beloved Son of His Father? (Mark 1:10-11)



In those days, Jesus came from Nazareth of Galilee and was baptized by John the Baptist in the River Jordan. And just as he was coming up out of the water, he saw the heavens torn apart and the Spirit descending like a dove on Him. And a voice came from heaven, "You are my Son, the Beloved; with you, I am well pleased." Jesus became Father's beloved son through his obedient living and doing everything for the poorest of the poor. In His baptism, we see who Jesus is, but we also begin to learn who we are as followers of Jesus. In our baptism, that same Voice comes to us and says, "You are my Beloved." When we rise from the waters of baptism, we are named God's beloved sons and daughters. Towards the end of His ministry, again God the Father reaffirm Jesus's identity (Mk 9:2-8). This revelation comes amidst challenges, non-acceptance, and rejection.

In a world filled with all kinds of other voices. In our baptism, God gives us a new name, a new identity, as a sheer gift. Our new identity has profound implications for the way we understand our lives. Not only at the time of baptism but time and again in the course of our life as we face real challenges He affirms and reaffirms our identity. Do we hear and recognise His voice? As the religious life is the fulfilment of our baptismal commitment, we are doubly joyful of hearing the affirming voice of God. Are we really hearing this voice amidst our trials and tribulations?

### Our Foundress Servant of God Mother Thatipathri Gnanamma

The life of our beloved Foundress Servant of God Mother Gnanamma is a clear witness that she is God's beloved daughter and He is pleased with her. Her pious life, concerned with the Lord's work by offering her four sons to work for his kingdom as priests, her self-emptying attitude by offering all her wealth for the new mission, her alertness in reading the signs of her times, smartness and courageousness in responding to the needs - cries of girl children, her dedication and hard work and farsighted vision in establishing a school and boarding home, her firm determination in establishing a women congregation to continue her mission - all speak volumes to testify that she is a God's beloved daughter and God is well pleased in her.

## In Mother Joseph, everyone was pleased

Arulamma and Agathamma were sent to Bellary in 1873 for their novitiate. Being the sole candidate, Anthoniamma (Mother Joseph) was closely associated with everything Mother Gnanamma did as they lived, worked and prayed together. She was deeply edified by the ideals of Mother Gnanamma. She inherited her vision, sense of commitment, strong belief in Divine Providence and courage. Mother Gnanamma placed her trust in her. She was convinced that Anthoniamma would be an instrument to realize her vision. Mother Gnanamma died on 21.12.1874. Her death made Angela, Philomena and Anthoniamma religious orphans. Anthoniamma was hardly 16 years old and was only a postulant. Within eleven months of the death of Mother Gnanamma, Sr.Philomena also died on 15.11.1875 leaving Sr.Angela and Anthoniamma as the only remaining members of the new Congregation. Together, they ran St.Clare's School and the Children's Home. Sr.Angela began to suffer seriously from stomach pain. Realizing her days were numbered, she entrusted the Congregation and its mission to novice Joseph and died on 10.03.1876. Novice Joseph was like Abraham in the Old Testament. God promised to make him a great nation but gave him only one child. It was novice Joseph's responsibility to continue the School and the Children's Home and to establish the Congregation. The void of the Congregation was now to be filled by this young novice left at the mercy of sheer inner strength and power of charism left behind by Mother Gnanamma. In Mother Joseph, God was pleased, Mother Gnanamma was pleased and our predecessors Srs. Angela and Philomena were pleased. We are called to live in our Congregation and do our mission the way Mother Joseph lived and did. Then in every one of us, God, the Congregation, the Church and society will be pleased.

## How can I be a beloved daughter to Him?



Blessed with our identity as 'SSAM', we are sent to do God's mission in the world. Jesus fulfilled the mission given to Him by God. That is why, His Father was pleased with Him and said that he was His beloved Son. We also are sent daily to live out the callings God has given us. We must live out our faith in our daily mission in the parish, schools, hospitals and society at large fully, radically and meaningfully. When we realise that we are set apart as God's people to share Christ's ministry in the world and completely abide by the Will of God, then God the Father will be pleased in every one of us and say that "You are my beloved daughter".

## Have you ever heard the voice saying that 'You are my beloved daughter'?

This is the story of a young piano student. His mother, wishing to encourage him bought tickets for a performance of the great Polish pianist Paderewski. The night of the concert arrived and the mother and son found their seats near the front of the concert hall. While the mother visited her friends, the boy slipped quietly away. Suddenly, it was time for the performance to begin and a single spotlight cut through the darkness of the concert hall to illuminate the grand piano on stage. Only then did the audience notice the little boy on the bench innocently picking out 'Twinkle, Twinkle, Little Star.' His mother gasped, but before she could move, Paderewski appeared on stage and quickly moved to the keyboard. He whispered to the boy, 'do not quit, keep playing.' And then, leaning over, the master reached down with his left hand and began filling in the bass part. Soon his right arm reached around the other side encircling the child to add running notes. Together, the old master and the young novice held the crowd mesmerized. In our lives too, it is the Master who surrounds us and whispers in our ears time and time again, 'don't quit, keep playing.' And as we do, He augments and

supplements until a work of amazing beauty is created. He is right there with all of us, telling us over and over 'Keep playing'. Yes, have you ever heard the voice saying that 'You are my beloved daughter? Don't quit, keep playing.'

## Who are we in our religious life, ministries and institutions?

### 01. In the religious life

Let us be honest and critical in evaluation. Let us identify how each one of us really feels. Start by figuring out how we feel about our overall life and mission.

- Am I particular to a regular and meaningful quiet time with God?
- Do I actively seek to share the Gospel values with others?
- Am I proud of being a member of my Congregation? How do I express it?
- Do I love my community?
- What is the value of your presence in the Congregation, community and the Church - a mere presence, or a quality presence?

If we answer the above questions genuinely, coming up with an unfiltered version, it will help us to understand and conclude the question "am I pleased with my identity as a religious and member of our Congregation?"

### 02. Through our ministries

Each one of us is assigned to a particular ministry. St.Paul states a characteristic of beloved children of God, "So then let us not sleep as others do, but let us be alert and sober" (Thes 5:6). As a beloved child of God, we should not be indifferent (asleep) to the signs of the times. We should be alert, meaning 'stay awake, be vigilant, responsible and watchful'. We should be sober, meaning free from illusion and we are aware of the status of our ministries - education, health care, evangelization social work. Let us ask ourselves the following questions:

- How efficiently am I carrying out my ministries?
- Is my work always done on time with a high level of accuracy, quality, commitment, and depth?
- Do I always lookout for ways to improve and accelerate my work?
- Do I intend to work for quality and growth in our institution and thus build an effective mission?

### 03. By our community living



Early Christians offer a typical model of perfect community living (Acts 2:44-47). Every day they devoted themselves to meeting together in the temple area and to breaking bread in their homes. They ate their meals with exultation and sincerity of heart, praising God and enjoying favor with all the people. And every day the Lord added to their number those who were being saved. We need to take notice that they enjoyed the favour of the people around them and God. Simultaneously they experienced the result, an enormous extension of their number. Our religious community life too is based on the life of the early Christians.

- Do we receive the same affirmation from God and the people around us?
- Do I always go out of my way to help my community sisters?
- Do you understand the importance of having a good name in the community and ministry place?
- Am I wilfully continuing in disobedience?

- Am I easily impatient?
- Am I actively serving others?
- Am I communicating effectively with my sisters?
- Can I have difficult conversations in a respectful manner?

The answers to these questions will affirm whether 'am I a beloved daughter of God., the Congregation, the Church and the society at large'. The way we struggle for vocation recruitment has a say in our community living.

### Group activity

Kindly share the experience of having felt that you are God's beloved daughter and He is well-pleased with you.

### Personal reflection

During the Eucharistic Adoration, make a short self-appraisal of what people say about your life and ministry (as a religious sister, a teacher/health personnel/evangelizer/social worker and so on)

## மாத ஆய்வுநாள் - செப்டம்பர் 2023

### நானே அவரின் அன்பார்ந்த மகள் என்னில் அவர் பூரிப்படைகிறார் (மாற்கு 1:10-11)

*இயேசு கிறிஸ்துவில் இறைத்தந்தை பூரிப்படைகிறார்*



அக்காலத்தில் இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்றார். திருமுழுக்குப் பெற்றப்பின் அவர் ஆற்றிலிருந்து கரையேறிய உடனே வானம் பிளவுபடுவதையும், தூயஆவி வெண்புறாவைப் போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது "நீயே என் அன்பார்ந்த மகன், உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது. இறைமகன் இயேசு இறைத்திருவுளத்தை ஏற்று, அதன்படி வாழ்ந்து, தன்னை மிகச்சிறியோரில் ஒருவராக கரைத்துக்கொண்டதால், இறைத்தந்தையின் அன்பார்ந்த மகனாகிறார். இயேசுவோடு இணைந்து, அவரை பின்தொடரும் நாமும் இந்த மகிழ்வில், உறவில் பங்கு கொள்கிறோம். நமது திருமுழுக்கு நிகழ்விலும், "நீரே என் அன்பார்ந்த மகள், உன்னில் நான் பூரிப்படைகிறேன்" என்ற இதே குரலொலியை நாம் கேட்டிருப்போம். நாமும் திருமுழுக்கு நீரிலிருந்து வெளியேறும் பொழுது புதுப்பெயருடன் இறைவனின் மகளாக, புதுப்படைப்பாக மாற்றம் பெறுகிறோம். தன் பணிநிறைவின் பொழுதும் தந்தை இறைவன் மீண்டும் ஒரு முறை "நீரே என் அன்பார்ந்த மகன்" எனக்கூறி இறைமகன் இயேசுவை உறுதிபடுத்துகிறார்.

இரைச்சல், சப்தம், கூக்குரல் நிறைந்த இவ்வுலகில் நமது திருமுழுக்கின் போது, புதுப்பெயரிட்டு, புது அடையாளம் அளித்து, நம்மை தன் அன்பார்ந்த மகளாக்கிக் கொண்டுள்ளார் தந்தையாம் இறைவன். இந்த ஒரு தகுதியை, அடையாளத்தை நமக்கு இலவசக்கொடையாக அவர் அளித்துள்ளார். இந்த அடையாளமானது நமது வாழ்வை ஒரு புதுக்கோணத்தில் இறையாட்சி விழுமியங்களை உள்ளடக்கிய நிலைப்பாடுகளில்

பயணிக்க அழைக்கிறது. அருள் வாழ்விற்கான இந்த அழைப்பை, திருமுழுக்கு பெற்ற போது மட்டுமல்லாது மீண்டும் மீண்டும் நமது வாழ்வின் பல நிலைகளில், சவால்களை சந்திக்கும் தருணங்களில் "நீயே என் அன்பார்ந்த மகள், உன்னில் நான் பூரிப்படைகிறேன்" என்ற உறுதியை நமக்கு அளித்து நம்மை பலப்படுத்துகிறார், உறுதிபடுத்துகிறார் இறைவன். நாம் அவரின் குரலை அறிந்து கொள்கிறோமா? திருமுழுக்கு அருளடையாளத்தை உறுதிபடுத்தும், நிறைவாக்கும் அழைப்பே அர்ப்பணிக்கப்பட்ட துறவற வாழ்வு. அர்ப்பணிக்கப்பட்ட துறவியராகிய நாம் இறைவனின் இந்த உறுதிபடுத்தும் வார்த்தைகளைக் கேட்டு மகிழ்கிறோமா? நிறைவு பெறுகிறோமா? நாம் கடந்து வந்த நெருக்கடிகள், சவால்கள் மத்தியில் நாம் உண்மையாகவே இறைவனின் உறுதிபடுத்தும் வார்த்தைகளால் பலப்படுத்தப்படுகிறோமா?

### *நம் சபை நிறுவுனர் இறைஊழியர் அன்னை தாட்டிபத்திரி ஞானம்மா*

நமது சபை நிறுவுனர் இறைஊழியர் அன்னை தாட்டிபத்திரி ஞானம்மாவில் இறைவன் பூரிப்படைந்துள்ளார் என்பதற்கு அவரின் வாழ்வே சாட்சியாக நம்முன் விரிந்து நிற்கிறது. அவரின் புனிதமான வாழ்வு, நான்கு குழந்தைகளை இறைப்பணிக்காக அர்ப்பணித்த அவரின் இறையாட்சி மீது கொண்ட ஆர்வம், தன்னிடம் உள்ள அனைத்தையும் காணிக்கையாக்கிய கைம்பெண்ணைப் போன்று தன்னிடம் இருந்த எல்லா சொத்துக்களையும் தான் துவங்கிய புதுப்பணிக்காய் அளித்த அவரின் தியாக மனநிலை, கல்வி அறிவிற்கான இளம் பெண்களின் ஏக்கக்குரலுக்கு வீரம், ஞானம், அறிவு நுட்பத்துடன் அவர் அளித்த பதிலளிப்பு, பங்களிப்பு, அர்ப்பணிப்புடன் கூடிய கடின உழைப்பு, பள்ளி மற்றும் சிறுவர் இல்ல உருவாக்கத்தில் தொலைநோக்குப்பார்வையுடன் கூடிய செயல்பாடுகள், இப்பணியினை தொடர்ந்து செய்வதற்கான முன்னெடுப்பில் பெண்களுக்கென ஒரு துறவறச்சபையினை உருவாக்குவதில் இருந்த உறுதியான, தீர்க்கமான முன்னெடுப்புகள். இவை அனைத்தும் இறைவன் அவரில் பூரிப்படைகிறார் என்பதின் வெளிப்பாடுகளே. நம் சபை நிறுவுனர் இறைஊழியர் அன்னை தாட்டிபத்திரி ஞானம்மாவின் ஆன்மீகம், வாழ்வுமுறை மற்றும் செயல்பாடுகளைக் கண்ட இறைவன் "இவரே என் அன்பார்ந்த மகள், இவரிலே நான் பூரிப்படைகின்றேன்" என கூறியிருப்பார் என்பது உறுதியாகிறது.

### *அன்னை ஜோசப்பின் வாழ்வை குறித்தும் அனைவரும் பூரிப்படைந்தனர்*



1973ஆம் ஆண்டு அருளம்மா மற்றும் ஆகத்தம்மா இருவரும் பெல்லாரியில் உள்ள நவக்கன்னியர் இல்லத்திற்கு பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். ஒரே ஒரு நபராய் நுழைவுநிலையில் இருந்த அந்தோணியம்மா (மதர் ஜோசப்) அன்னை ஞானம்மாவுடன் இணைந்து வேலை செய்து, செபித்து வாழ்ந்து வந்தார். அன்னை ஞானம்மாவின் உள்ளுயிரை முழுவதுமாக உள்வாங்கி, தமதாக்கிக் கொண்டார். அன்னையின் தொலைநோக்குப்பார்வை, ஆழந்த அர்ப்பணம், இறைபராமரிப்பில் கொண்டிருந்த அளப்பரிய நம்பிக்கை, செயல்களை துரிதமும், நுட்பமாய் ஆற்றும் பாங்கு, இவையனைத்தையும் அருகிருந்து அனுபவித்து அறிந்திருந்தார். அன்னை ஞானம்மாவும் தன் கனவுகளை நனவாக்கும் தகுதி படைத்தவர் இந்த அந்தோணியம்மா (மதர் ஜோசப்) என்பதை உணர்ந்திருந்தார். அன்னை ஞானம்மா 21.12.1874 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரின் இறப்பில் ஆஞ்சலா, பிலோமினா மற்றும் அந்தோணியம்மா ஆகியோர் தனித்து விடப்பட்டனர். 16 வயதே நிரம்பிய அந்தோணியம்மா விருப்பநிலையில் சேர்ந்திருந்தார். சகோதரி ஆஞ்சலா மற்றும் அந்தோணியம்மாவை மட்டுமே புதிதாக துவங்கப்பட்ட சபையில் உறுப்பினர்களாக விட்டு விட்டு 15.11.1875 அன்று சகோதரி பிலோமினா இறைவனடி சேர்ந்தார். எஞ்சியிருந்த இவர்கள் இருவரும் இணைந்தே புனித கிளாரம்மாள் பள்ளி மற்றும் சிறுவர் இல்லத்தையும் நடத்தி வந்தனர். சகோதரி ஆஞ்சலா வயிற்றுவலியால் அதிகம் துன்புற்றார். அவரின் இறுதி நாட்கள் நெருங்கி வருவதை அறிந்த சகோதரி ஆஞ்சலா புதிதாக துவங்கப்பட்ட சபையையும், அதன் பணிகளையும் அந்தோணியம்மாவிடம் ஒப்படைத்து 10.03.1876 அன்று இறைவனடி சேர்ந்தார்.

நமது முதுபெரும் தந்தை ஆபிரகாமிற்கு "உம் வழியாய் மாபெரும் இனத்தை உருவாக்குவேன்" என வாக்களித்து, அவரை பேரினமாய் உயர்த்தியதைப்போல், ஜோசப் என்ற ஒரு நவக்கன்னியர் வழியாய் ஒரு சபையை உருவாக்க திட்டமிட்டார் இறைவன். தனி ஒருவராய் இருந்து புனித கிளாரா பள்ளியையும், சிறுவர் இல்லத்தையும் தொடர்ந்து நடத்த வேண்டிய பெரும் பொறுப்பை தம் தோள்களில் சுமந்தார் நவக்கன்னியர் ஜோசப். இறைவனின் தனிபெரும் கருணையும், நமது அன்னை ஞானம்மாவிடமிருந்து பெற்றுக் கொண்ட அவரின் உள்ளுயிருமே ஒரு சபையையே வழிநடத்தும் மாபெரும் பொறுப்பை ஏற்று வழிநடத்த உந்துதலாய் அன்னை ஜோசப்பிற்கு இருந்தது. மாபெரும் இழப்பால் ஏற்பட்ட வெறுமை நவக்கன்னியர் ஜோசப்பால் நிவர்த்தி செய்யப்பட்டது என்றால் அது மிகையாகாது. அன்னை ஞானம்மாவும், அவருடன் இணைந்து நம் சபை முன்னோர்களான சகோதரிகள் ஆஞ்சலா மற்றும் பிலோமினா அவர்களும் நவக்கன்னியர் ஜோசப்பில் மகிழ்ந்தனர், பூரிப்படைந்தனர். இவ்வாறு உருவாக்கப்பட்ட சென்னை புனித அன்னாள் சபையின் உறுப்பினர்களாகிய நாமும், அன்னை ஜோசப்பை போல் வாழவும், பணியாற்றவும் அழைக்கப்படுகிறோம். அப்பொழுது நம் ஒவ்வொருவரையும் குறித்து சபையும், திருஅவையும், இச்சமுதாயமும், இறைவனும் மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைவர்.

### *இறைவனின் அன்பார்ந்த மகளாய் நான்*



SSAM (சென்னை புனித அன்னாள் சபை துறவி) என்ற அடையாளத்துடன் இவ்வுலகில் இறைப்பணி ஆற்ற அழைக்கப்பட்டுள்ளோம். இறைமகன் இயேசு, தந்தை தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பணியினை நிறைவு செய்தார். தந்தையும், மகனில் மகிழ்வும், பூரிப்பும் அடைந்தார். நம்மிடமும் இதேபணியை இறைவன் ஒப்படைத்துள்ளார். நாமும் முழுநம்பிக்கையுடன் இறைப்பணியை நமது பங்குத்தலம், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் ஒட்டு மொத்த சமுதாயத்தில் ஆற்ற வேண்டும். கிறிஸ்து இயேசுவின் உன்னத இறைப்பணியின் பங்களிப்பாளர்கள் நாம் என உணர்ந்தோமாயின், நாமும் பொறுப்புடன் இறைபணியாற்றுவோம். கிறிஸ்துவும், தந்தை இறைவனும் நம்மில் மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைவர். நம்மைப் பார்த்து "இவரே என் அன்பார்ந்த மகன், இவரில் நான் பூரிப்படைகிறேன்" என ஆரத்தழுவி, உச்சி முகர்ந்து கூறுவார்.

### *"இவரே என் அன்பார்ந்த மகள்" என்ற இறைக்குரலை என்றாகிலும் நாம் கேட்டதுண்டா?*

பியானோ கற்றுக்கொண்ட சிறுவனின் கதை இது. இச்சிறுவனின் தாய் தன் மகனை ஊக்குவிக்கும் பொருட்டு மாபெரும் புகழ் பெற்ற பியானோ இசை மேதை பேடெர்வெங்கியின் இசை நிகழ்விற்கு நுழைவுச்சீட்டு பெற்று மகனை தம்முடன் அழைத்துச் சென்றிருந்தார். அந்த இசை அரங்கின் மேடைக்கு அருகில் இடம் பிடித்து தாயும், மகனும் அமர்ந்தனர். தாயோ அங்கு வருகை புரிந்திருந்த தனது நண்பர்களுடன் உறவு பரிமாற்றம் செய்து கொண்டிருந்தார். இசை நிகழ்விற்கான நேரம் துவங்கியது. ஒளி வெள்ளம் மேடையின் இருளைப் போக்கி பியானோ இசைக்கருவியின் மீது படர்ந்தது. அப்பொழுது தான் அரங்கின் முதல் வரிசையில் அமர்ந்திருந்த சிறுவன் ஆர்வமுடன் பியானோ இசைக்கருவில் அமர்ந்து "டுவிங்கிள் டுவிங்கள் லிட்டில் ஸ்டார்" என்ற பாடலின் இசையினை வாசிக்க துவங்கினான். இதனைக் கண்ட தாயின் இதயம் படபடத்தது. இவர் எழுந்து சென்று சிறுவனை அழைப்பதற்குள், இசைக்கலைஞர் பேடெர்வெங்கி மேடையில் தோன்றி பியானோ இசைக்கருவியை நோக்கி விரைவாக நகர்ந்தார். "நிறுத்தாதே, தொடர்ந்து வாசி" என சிறுவனின் காதில் கிசுகிசுத்தார். தனது இடக்கையினால் பியானோவின் இடபுறம் உள்ள சுரங்களை அழுத்தினார். வலக்கையால் விடுபட்ட சுரங்களை வாசிக்கலானார். இவ்வாறாக அனுபவமிக்க இசை மேதையும், துவக்கநிலையில் உள்ள சிறுவனும் இணைந்து கலைஅரங்கினுள் இருந்த பார்வையாளர்களை தம் இசையால் பரவசப்படுத்தினர். நம் வாழ்விலும் நம் தலைவர் இயேசு தம் கரங்களால் நம்மை அரவணைத்து "நிறுத்தாதே, தொடர்ந்து வாசித்துக்கொண்டிரு" என நம்மை ஊக்கமளித்து, நம் குறைகளை நிவர்த்தி செய்து, நம் பணி சிறக்கும் வரை

நம்முடன் இருந்து, நம்மில் பணியாற்றுகிறார். இன்றும் தொடர்ந்து “நிறுத்தாதே, தொடர்ந்து வாசித்துக்கொண்டிரு“ என நம்மை ஊக்கப்படுத்திக்கொண்டே இருக்கிறார். அவரின் குரலை நாம் கேட்டிருக்கிறோமா? இவரே “என் அன்பார்ந்த மகள், இவரில் நான் பூரிப்படைகிறேன்“ என நம்மை பாராட்டுவதை கேட்டிருக்கிறோமா?

## துறவற வாழ்வில், பணிவாழ்வில் மற்றும் நிறுவனங்களில் நாம் யாராக இருக்கிறோம்?

### 01. நமது துறவற வாழ்வில்

சொந்த விருப்பு வெறுப்புகளை புறந்தள்ளி, நமது துறவற வாழ்வை நேர்மையாக, சுதந்திரமாக கீழ்க்கண்ட கேள்விகளின் அடிப்படையில் ஆய்விற்கு உட்படுத்தினால், நம்மை பிறர் எவ்வாறு இனம் காண்கின்றனர் என துல்லியமாக அறிந்து கொள்ளலாம்:

- அமைதியில் இறைவனிடம் உரையாடுவதை நமது வழக்கமாகவும், வாழ்வின் முக்கிய, தவிர்க்க இயலா நிகழ்வாகவும் கொண்டுள்ளோமா?
- நற்செய்தி விழுமியங்களை ஆர்வமுடன் பிறரிடம் நம் சொல்லாலும், செயலாலும் பகிர்ந்து கொள்கிறோமா?
- நான் சென்னை புனித அன்னாள் சபையின் உறுப்பினர்“ என்பதில் பெருமிதம் கொள்கிறேனா? அதனை எவ்விதம் வெளிப்படுத்துகிறேன்?
- நான் வாழும் குழுமத்தை அன்பு செய்கிறேனா?
- என் குழுமத்தில், என் சபையில் என் இருப்பு சாதாரண, பெயரளவில் உள்ளதா? அல்லது நேர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல் மிக்க, ஆழ்ந்த ஆன்மீகம் மற்றும் இறையாட்சி விழுமியங்களை, சமூக மாற்றத்தை விதைக்கும் இருப்பாக அமைந்துள்ளதா?

மேற்க்கண்ட வினாக்களுக்கு திறந்த மனதுடன் நேர்மையாக பதிலளித்தால், நாம் நமது துறவற அடையாளத்தில் நிறைவும், மகிழ்வும், பூரிப்பும் அடைகிறோமா என்ற வினாவிற்கு உரிய பதில் நமக்கு கிடைத்து விடும்.

### 02. நமது பணி வாழ்வில்



சபையில் ஒவ்வொருவருக்கும் ஒரு பணி அளிக்கப்பட்டுள்ளது. புனித பவுல் அடிகளார் தெசலோனியருக்கு எழுதிய திருமடலில் (1 தெச 5:6-11) “மற்றவர்களை போல் நாமும் உறங்கலாகாது. விழிப்போடும், அறிவு தெளிவோடும் இருப்போம். கிறிஸ்துவின் அன்பு சீடர்களாய் அன்பையும், நம்பிக்கையையும், எதிர்நோக்கையும் கொண்டு வளர்ச்சிப்பாதையில் பயணியுங்கள்“ என அழைப்பு விடுக்கிறார்: வீணான, தவறான மாயையில் சிக்கிக்கொள்ளாமல் விழிப்புடனும், அறிவுத்தெளிவுடனும் இருந்து, காலத்தின் அறிகுறிகளை சரியாய் கணித்து, முனைப்பாய் செயல்பட தூண்டுகிறார். நாம் ஆற்றும் கல்விப்பணி, மருத்துவப்பணி, நற்செய்திப்பணி, சமூகப்பணி மற்றும் அனைத்துப்பணிகளையும் சீர்தூக்கிப்பார்த்து, காலமாற்றங்களுக்கு ஏற்ப, அது விடுக்கும் சவால்களுக்கு ஏற்ப, அதன் வளர்ச்சிக்கும், தேவைக்கும் ஏற்ப பணியாற்றுகிறோமா? என ஆய்வு செய்வோம். கீழ்க்காணும் வினாக்களுக்கு பதிலளிப்போம்.

- என் பணிக்கான செயல்பாடுகளை வீரியமுடன் முன்னெடுத்து செல்கிறேனா?
- என் செயல்களை குறித்த நேரத்தில், துல்லியமாக, தரத்துடன், அர்ப்பணிப்பு உணர்வுடன், செயல்பட்டு ஆழமான நேர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்துகிறேனா?
- என் செயல்பாடுகளை இன்னும் வீரியமுடன் எடுத்து செல்ல முயற்சி எடுக்கிறேனா?
- என் செயல்பாடுகள் வழியாய் நான் பணியாற்றும் நிறுவனங்களின் தரம் உயர்ந்து அதன் இறையாட்சி பணி சிறப்பு பெறுகிறதா?

### *03.நமது குழும வாழ்வில்*

திருத்தூதர்பணியில் ஆதிக்கிறித்தவர்களின் வாழ்வுமுறையை பவுல் அடிகளார் விளக்கி கூறுகிறார். “கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் கூடி, நட்புடன் உறவாடுவதிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் ஒன்றாய் இருந்தனர்“ (திரு.பணி 2:44-47). ஆண்டவரும் தாம் மீட்டுக்கொண்டவர்களை நாள் தோறும் அவர்களோடு சேர்த்துக்கொண்டே இருந்தார். இறைவனும் இவர்களில், இவர்களின் வாழ்வுமுறையில் பூரிப்பு அடைந்ததால் தான், தாம் மீட்டுக்கொண்டோரை இவர்களுடன் சேர்த்துக் கொண்டே இருந்தார். இதுவே இறைவன் இவர்களில் பூரிப்படைகிறார் என்பதன் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

நமது குழும வாழ்வை மீள்பார்வை செய்து பார்ப்போம். கீழ்க்காணும் வினாக்களுக்கு உள்ள நேர்மையுடன் பதிலளிப்போம்:

- ஆதிக்கிறித்தவர்களுக்கு கிடைத்த பதிலைப்போல் இன்றும் நாம் இறைவனிடமிருந்தும், நம்மை சூழ்ந்துள்ள மனிதர்களிடமிருந்தும் பெறுகிறோமா?
- என் குழுமச்சகோதரிகளுக்கு உதவ முழுமனமுடன் எல்லா நிலைகளிலும் முயல்கிறேனா?
- என் குழுமமும், பணித்தலமும் மக்களிடம் நற்பெயர் பெற்றுள்ளதா? இதில் என் பங்களிப்பு என்ன?
- கீழ்படியாதிருக்கும் நிலையை நான் முழு அறிவுடன், நினைவுடன் தொடர்கிறேனா?
- நான் வெகுசீக்கிரம் நிதானம் தவறி விடுகிறேனா?
- நான் செயல் திறன் மிக்கவராக பிறருக்கு உதவி செய்கிறேனா?
- என் கருத்துக்களை, நிகழ்வுகளை திறம்பட என் சகோதரிகளுடன் பகிர்ந்து கொள்கிறேனா?
- உயர்மரியாதையுடன் உரையாடல்களை நிகழ்த்துவது எனக்கு கடினமாக உள்ளதா?

நான் இறைவனில், சபையில், என் குழுமத்தில், திருஅவையில், சமூகத்தில் “அன்பு மகள் நீயே, உன்னில் பூரிப்படைகிறேன்“ என்ற வாக்கியத்தின் உண்மைத்தன்மையை மேற்க்கண்ட வினாக்களுக்கான பதிலளித்து உணர்ந்து கொள்வோம்.

### *குழுமச்செயல்பாடு*

“நான் இறைவனின் அன்பார்ந்த மகள், என்னில் இறைவன் பூரிப்படைகிறார்“ என்ற கூற்று என் வாழ்வில் உண்மையானதை உணர்ந்து, அனுபவித்தத்தருணங்களை நம் குழுமச்சகோதரிகளுடன் பகிர்ந்து கொள்வோம்.

### *தனிப்பட்ட சிந்தனைக்கு*

நற்கருணை ஆராதனையில் நம்மைப்பற்றிய சுய மதிப்பீட்டினை எழுதுவோம். மக்கள் என்னைப்பற்றி (ஒரு ஆசிரியராக, துறவியாக, மருத்துவப்பணியாளராக, நற்செய்திப்பணியாளராக, சமூகப்பணியாளராக), எனது வாழ்வை மற்றும் ஆற்றும் பணியினைக் குறித்து கூறுவது என்ன என ஒரு தாளில் எழுதுவோம். இதனை ஆராதனை முடிவில் இறைவனுக்கு காணிக்கையாக்கி குறைகளை களைந்து நல்லவற்றைப் பெருக்கிக் கொள்ள அருள் வேண்டி நன்றி கூறுவோம்.